DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -12/2022

Prosecution PW - 10

| | | |
|---|---|---|
| Name | பரத் சீனிவாசன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 01.09.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 present. Accused A4,A5 absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி குற்ற புலனாய்வு துறை-II நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2020 ஆம் தேதி நான் நாகப்பட்டிணம் போதை பொருள் குற்ற புலனாய்வு துறை காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது எனக்கு முன்பு பணியில் இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் காமராஜ் அவர்கள் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து வந்த நிலையில் பணிமாறுதலாகி விட்டமால் அவருக்கு பின் பணிப்பொறுப்பேற்ற நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்ததில் 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் முருகனை தெரியாது என்றும், ஆந்திராவை சேர்ந்த சக்திபாபு என்பவரிடம் முன்பு கஞ்சாவை வாங்கி விற்றுவந்ததாக கூறியுள்ளதால் இவ்வழக்கில் அவர்களை குற்றவாளியாக சேர்க்காமல் 1முதல் 5 எதிரிகளின் மீது பிரிவு 8(c), 20(b)(ii)(C) ,29(1),(25)of NDPS Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.11 ல் பகுப்பாய்விற்காக அனுப்பிய S1,S3,S5,S7.....S49 வரையிலான மாதிரி கஞ்சாக்கள் எப்போது யார் முன்னிலையில் S seriosகுறியிட்டு கைப்பற்றப்பட்டது என்று எந்த ஆவணத்திலும் கூறப்படவில்லை என்றால் சரிதான். 01.12.2019 ஆம்தேதி கைப்பற்றப்பட்ட சான்றுபொருள் 09.12.2019 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் சான்று பொருட்கள் எங்கு யார வசம் இருந்தது என்பதனை காட்ட ஆவணங்கள் தாக்ல் செய்யவில்லை என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும்

எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒப்பம்/ஜி.சுந்தரராஜன் B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்